கடுவன பிரதேச சபை - 2022

-------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடுவன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளா் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6(ஐ), (ஒ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான சேதன பசளை செயற்களத்தின் அபிவிருத்திக்காக முன்னைய ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 3,697,048 இற்கான தொகை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக இனங்கண்டு மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 666,459 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | செலவுகள் சரியாக இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | கிரம பஸ் தரிப்பு நிலையத்திற்காக சாயம் பூசுவதற்காக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 662,772 இற்கான செலவு காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | கட்டிட திருத்த வேலைச் செலவுகள் மூலதனப்படுத்தக் கூடாது. |
| (ஈ) | 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த கடையறைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு / உரித்தாக்கப்பட்டு இருந்த போதிலும் வாடகையாளர்களிடம் அறவீடு செய்திருந்த ரூபா 509,300 இற்கான மூன்று மாத | குறிப்பிட்ட வைப்புதாரர்களை அறிவுருத்தி எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிணை வைப்புக்கள் பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 19 பொருட் பதிவேட்டுப் பண்டங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 456,694 தொகை மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது சபையின் மென்பொருள் முறைமையை முன்னேற்றுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 281,250 இற்கான பெறுமதி தொட்டுணர முடியாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | தொட்டுணர முடியாத சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மீளளிப்பு செய்யப்படாத வீதி விளக்கு பராமரிப்புக் கட்டணம் ரூபா 98,604 தொகை பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 81,750 தொகைக்கான 03 கபட்கள் மற்றும் புத்தக ஏத்தானங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 1994 இன் 04 ஆம் இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டண திருப்பல் நியதிச் சட்டத்தின் படி சபைக்கு கிடைத்திருக்காத முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 7,063,745 இற்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் கணக்கீடு செய்யப்படும் என. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் | சபையினால் 2014 ஆண்டின் போது முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங் காணப்பட்ட 08 பிரிவுகளுக்காக | எதிர் காலத்தில் வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் பிரிவு 134(1) | மீளாய்வாண்டு இறுதி வரை வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) | கூட்டுத்தொகை ரூபா 29,110 தொகைக்காக 06 மாதங்களை மிகைத்திருந்த 08 காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | பணம் பெறுவோர்களை அறிவுருத்தி எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,814,836 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 28,119,979 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,265,150 | 1,583,055 | 1,592,385 | 10,560 | 1,156,630 | 1,147,780 | 1,133,890 | 19,890 |
| வாடகை | 15,736,200 | 14,201,599 | 13,977,834 | 2,100,898 | 15,143,900 | 10,525,336 | 10,373,436 | 1,877,133 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,461,350 | 2,278,420 | 2,531,220 | 221,500 | 1,527,050 | 1,693,532 | 1,751,432 | 474,300 |
| ஏனைய வருமானங்கள் | 25,379,060 | 28,595,523 | 25,914,250 | 13,315,755 | 59,025,060 | 24,062,757 | 23,612,764 | 10,634,482 |
| மொத்தம் | 43,841,760 | 46,658,597 | 44,015,689 | 15,648,713 | 76,852,640 | 37,429,405 | 36,871,522 | 13,005,805 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூன்று வருடங்களை மிகைத்துள்ள கடையறை வாடகை ரூபா 210,276 தொகை 03 டென்டர் ஆதனங்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 90,750 தொகை மற்றும் வாகனங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 747,840 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா.:.பபாகோ.:.2010.:.01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) சுற்றறிக்கையின் படி முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 12 கடையறைகளிலிருந்து ஒரே முறையில் செலுத்தும் பணம் ரூபா 10,364,333 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கும் மற்றும் ரூபா 8,450,000 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் தொடர்பாக முதல் அமைச்சிலிருந்து கிடைக்கும் அறிவுரையின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 209,000 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | 2019 ஆண்டிற்கான ரூபா 88,800 தொகை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 12,330,075 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 1,892,542 தொகை மற்றும் ரூபா 2,981,582 தொகை காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய நீர்க் கட்டணம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 22,567,025 தொகையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 1,036,186 தொகை கிடைத்திருந்ததுடன், மீதித் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 11 வரத்தக நிலையங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன், அந்த நிறுவனங்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக சபையினால் தொடர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தரப்பினருக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கி சுற்றாடலை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 12 காணிகள் மற்றும் 16 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமை சபைக்கு சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1 இற்கு இணக்கமில்லாதவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 3,344,030 தொகைக்கான 07 வகையான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்த கொள்வனவில் உள்ளடங்கிய கூட்டுப்பெறுமதி ரூபா 1,220,390 தொகைக்கான கொள்வனவுகள் தொடர்பான பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.8.4 படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரிவான விபரக் குறிப்புக்கள் குறிப்பிட்டு கூறுவிலைகளை அழைப்பதற்கு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்வதற்கு குறிப்பிட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும் என. | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிறுவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 06 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய பாதை வெட்டுவதற்காக மதிப்பீடு தயாரித்து கொடுப்பனவு மேற்கொள்ளும் போது இயந்திர ரேட் ஒன்று பயன்படுத்தாமல் கை ரேட் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 965,067 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 198,973 தொகை தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கும் இந்த நிர்மாண வேலைகளுக்குரிய மதிப்பீட்டைவிட பூர்த்தி செய்யப்பட்ட அளவு மிகையாக காணப்பட்டமையால் மிகைக்கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | மிகையாக செலுத்தியிருந்த தொகை தொடர்பாக நி.பி. 156 இன் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹோரேவெல கொரக முதுன பாதையை மறுசீரமைக்கும் நிர்மாண வேலைக்காக மண் வழங்கி அடுக்கும் கருமத்திற்காக பயன்படுத்த வேண்டிய சரியான ரேட் பயன்படுத்தாது மற்றும் மண் அடுக்கப்படாதிருந்த போதிலும், மண் அடுக்குவதற்காக உரிய ரூபா 96,725 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தியிருந்த தொகை தொடர்பாக நி.பி. 156 இன் படி செயற்பட வேண்டும். |
| (இ) | கடுவன தேசிய பாடசாலையின் விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை தொடர்பாக விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக அங்கு வலைவேலியொன்று நிர்மாணித்தல், ஹியும் குழாய் மதகு ஒன்று தயாரித்தல், விளையாட்டுத் திடலில் மண் நிறப்புதல், தூரப்பாய்தல் அலகு நிர்மாணித்தல், பரிதி வீசும் அலகு ஒன்று நிர்மாணித்தல் மற்றும் கொங்கிரீட் வடிகால் நிர்மாணித்தல் ஆகிய கருமங்களுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 4,155,080 தொகைக்காக சாட்டப்பட்டு பின்னர் மொத்த மதிப்பீட்டுத் தொகையும் பயன்படுத்தப்பட்டு விளையாட்டுத் திடலில் மண் நிரப்புதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு ரூபா 4,963,605 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்தல் பயனற்ற செலவொன்றென பின்னர் இனங்காணப்பட்டு மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியையும் பயன்படுத்தி மண் நிரப்புவதற்காக முன்னைய ஒப்பந்தக்காரருக்கே ஒப்பந்த வேலை வழங்கப்பட்டதுடன், மீண்டு டென்டர் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், விளையாட்டுத் திடலில் பரப்புவதற்காக பெறப்பட்ட மண் தனியார் காணியொன்றிலிருந்து பெறப்பட்டவை என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், மண் அகழ்வதற்காக அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட இடமொன்றிலிருந்து மண் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | ஹெல்லல குப்பை செயற்களத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக விலை முரண்கள் கொடுப்பனவு செய்வதற்கு 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இன்றி ரூபா 71,975 தொகை விலை முரண்கள் என மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண ஆளுனர் செயலாளரின் அறிவுரையின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | கொங்கிரீட் துண்டுக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்யப்பட்ட 06 பாதை அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக 37.5 மில்லிமீற்றர் அளவான கற்கள் வழங்குதல் மற்றும் போக்குவரத்துக்காக ரூபா 1,497,995 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அங்கு கற்களின் அடர்த்தி உரிய சதவீதத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கிராமிய பாதைகளை செயற்படுத்துவதற்குரிய பொதுவான அறிவுரைக் கடிதத்தின் படி பரப்பப்பட்ட துண்டுக் கற்கள் 95 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அடர்த்தியில் காணப்பட்டது என. | உரிய அடர்த்திச் சதவீதத்தின் படி பரப்பப்பட்ட துண்டுக் கற்களின் அடர்த்தி காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) 03 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக சரியாக ரேட் பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ரூபா 587,113 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்ததை அறவீடு செய்யப்படாமை. | கியுபிக் மீற்றர் 200 இற்கு குறைவான சந்தர்ப்பங்களில் கை ரேட் பயன்படுத்தல் சிக்கலொன்றல்ல என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகையினை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்ய வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டின் போது சேவையை விட்டுச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் பெற வேண்டிய இடர் கடன் ரூபா 159,236 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணையாளர்களுக்கு அறிவித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடன் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |